# கிறிஸ்தவம்

# தரம்

# 2

**கல்வி வெளியீட்டுத் திணைக்களம்**



சகல பாட நூல்களையும் இலத்திரனியல் ஊடாகப் பெற்றுக் கொள்வதற்கு
**www.edupub.gov.lk** வலைத்தளத்தை நாடுங்கள்.

*முதலாம் பதிப்பு -* 2016

*முழுப் பதிப்புரிமையுடையது.*

இந்நூல், கல்வி வெளியீட்டுத் திணைக்களத்திற்காக
விஸ்வா கிராபிக்ஸ் அச்சகத்தினால்
அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# தேசிய கீதம்

சிறீ லங்கா தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நல்லெழில் பொலி சீரணி
நலங்கள் யாவும் நிறை வான்மணி லங்கா
ஞாலம் புகழ் வள வயல் நதி மலை மலர்
நறுஞ்சோலை கொள் லங்கா
நமதுறு புகலிடம் என ஒளிர்வாய்
நமதுதி ஏல் தாயே
நம தலை நினதடி மேல் வைத்தோமே
நமதுயிரே தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதாரருள் ஆனாய்
நவை தவிர் உணர்வானாய்
நமதேர் வலியானாய்
நவில் சுதந்திரம் ஆனாய்
நமதிளமையை நாட்டே
நகு மடி தனையோட்டே
அமைவுறும் அறிவுடனே
அடல் செறி துணிவருளே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே

நமதார் ஒளி வளமே
நறிய மலர் என நிலவும் தாயே
யாமெலாம் ஒரு கருணை அனைபயந்த
எழில்கொள் சேய்கள் எனவே
இயலுறு பிளவுகள் தமை அறவே
இழிவென நீக்கிடுவோம்
ஈழ சிரோமணி வாழ்வுறு பூமணி
நமோ நமோ தாயே - நம் சிறீ லங்கா
நமோ நமோ நமோ நமோ தாயே.

ஒரு தாய் மக்கள் நாமாவோம்
ஒன்றே நாம் வாழும் இல்லம்
நன்றே உடலில் ஓடும்
ஒன்றே நம் குருதி நிறம்

அதனால் சகோதரர் நாமாவோம்
ஒன்றாய் வாழும் வளரும் நாம்
நன்றாய் இவ் இல்லினிலே
நலமே வாழ்தல் வேண்டுமன்றோ

யாவரும் அன்பு கருணையுடன்
ஒற்றுமை சிறக்க வாழ்ந்திடுதல்
பொன்னும் மணியும் முத்துமல்ல - அதுவே
யான்று மழியாச் செல்வமன்றோ.

ஆனந்த சமரக்கோன்
கவிதையின் பெயர்ப்பு.

# கௌரவ கல்வி அமைச்சரின் செய்தி

*சுதந்திரக் கல்வியைச் சகல விதத்திலும் பாதுகாப்பதே எமது எதிர்பார்ப்பாகும். உலகில் சுதந்திரக் கல்வியை வழங்கும் சொற்ப நாடுகள் மத்தியில் இலங்கை முன்னிலை வகிக்கும் நாடாக இருப்பது ஒரு பாக்கியமாகும். எனவே முறையான கல்வியைப் பெறும் எமது நாட்டின் சகல சிறார்களுக்கும் உரிய விடயதானங்களை முறையாகப் பெற்றுக்கொடுப்பதை நோக்காகக்கொண்டு இலவசப் பாடநூல்களை விநியோகிப்பதானது ஒரு முதல்நிலைச் செயற்பாடாகும். நீங்கள் அவ்வுரிமையைப் பெற்றுக்கொள்வதற்கான அதிர்ஷ்டம் பெற்ற மாணவராவீர்கள்.*

*அறிவு நூற்றாண்டை நோக்கி அடியெடுத்துவைத்திருக்கும் இவ் யுகத்தில் இலங்கை உலகின் ஏனைய நாடுகளுடன் சகல துறைகளிலும் முன்னேறிச் செல்ல வேண்டும். இப்பயணத்தில் அறிவில் இற்றைப்படுத்தப்பட்ட உங்களைப் போன்ற ஒரு மாணவர் சமூகம் எமது தாய் நாட்டிற்குப் போன்றே முழு உலகிற்கும் பொருந்தும் விதமாக, பூரணமிக்க அறிவைக் கொண்ட ஒரு சமூகமாகத் திகழ வேண்டுமென்பதே எமது ஒரே எதிர்பார்ப்பாகும். சுமார் நான்கு மில்லியன் மாணவர்களுக்கு இலவசமாகப் பாடநூல்களை விநியோகிப்பதற்காக அரசாங்கம் பாரியளவு நிதியைச் செலவிடுகின்றது. இங்கு உங்கள் கடமையும் பொறுப்பும் யாதெனில் இந்நூலைப் பாதுகாப்பாகப் பயன்படுத்திக் குறித்த அறிவை விருத்தி செய்துகொண்டு முன்னோக்கிச் செல்வதுடன் மேலதிக நூல்களை வாசிப்பதற்காக உங்களை ஊக்குவித்துக் கொள்வதுமாகும். கற்றலுக்காகக் கற்க நீங்கள் தயாராக வேண்டும். இதன் மூலம் நாட்டுக்கும் காலத்துக்கும் பயன்மிக்கதொரு பிரஜையாகுவதற்கு அவசியமான பலமானதொரு அடித்தளத்தைப் பெற்றுக்கொள்வீர்கள் என்ற மேன்மையான எதிர்பார்ப்புடன் இந்நூலை உங்களுக்கு வழங்குகின்றேன்.*

***அகில விராஜ் காரியவசம்***
***கல்வி அமைச்சர்***

## முன்னுரை

இவ்வுலகிலுள்ள பெறுமதிமிக்க செல்வம் நீங்களே. எதிர்கால உலகைக் கட்டி யெழுப்பும் அதிகாரம், சக்தி, இயலுமை மற்றும் அதிர்ஷ்டம் என்பன உங்களிடமே உள்ளன. எனவே எதிர்கால உலகிற்குப் பொருத்தமான வகையில் உங்களைத் தயார்படுத்துவது எமது பொறுப்பாகும். அப்பொறுப்பை நிறைவேற்றுவதற்கே இவ்வருடம் புதியதொரு வகுப்பிற்கு வந்துள்ள உங்களுக்கு இந்தப் புதிய நூலை நாம் வழங்குகின்றோம். உங்களுக்கு வழங்கப்படும் இந்நூலை நன்கு பயன்படுத்தி சிறப்பாகக் கற்றுச் சிறந்ததொரு மனிதனாவதற்குரிய வாய்ப்பை பெறவேண்டுமென வாழ்த்துகின்றேன்.

2016 ஆம் ஆண்டு தரம் 1 இற்குப் புதிய பாடநூல்கள் அறிமுகப்படுத்தப் பட்டன. 2017 ஆம் ஆண்டு தரம் 2 இற்குப் புதிய பாட நூல்களை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்நூலை ஆக்குவதில் பங்களிப்புச் செய்த அனைவருக்கும் மற்றும் கல்வி வெளியீட்டுத் திணைக்கள உத்தியோகத்தர்களுக்கும் எனது நன்றிகள் உரித்தாகட்டும்.

**டபிள்யூ. டீ. பத்மினி நாளிகா**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
இசுருபாய
பத்தரமுல்ல.
2016.05.12

**கண்காணிப்பும் மேற்பார்வையும்** : **திருமதி. டபிள்யூ. டீ. பத்மினி நாளிகா**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**வழிகாட்டல்** : **திருமதி. டபிள்யூ. ஏ. நிர்மலா பியசீலி**
கல்வி வெளியீட்டு ஆணையாளர் (அபிவிருத்தி)
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**இணைப்பாக்கம்** : **திருமதி. ஆர். டீ. விஜேவிக்ரம**
பிரதி ஆணையாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

: **திரு. அ. ஞானேஸ்வரன்**
அபிவிருத்தி உதவியாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

**பதிப்பாசிரியர் குழு** : **அருட்பணி. சி. டபிள்யூ. சி. பால்ராஜ்**
அதிபர்
பரி. தோமஸ் கல்லூரி, பண்டாரவளை.

: **அருட்பணி. மிகிரி டி சில்வா சல்காது**
செயலாளர், கிறிஸ்தவ கல்வி மன்றம்
தேசிய கிறிஸ்தவ மன்றம், கொழும்பு.

: **திருமதி. ஸ்ரீயாணி ஹேமலதா பிரனாந்து**
அதிபர், மேமா / பிலி தம்மரத்ன வித்தியாலயம்
இந்திபெத்த, மொரட்டுவ.

**எழுத்தாளர் குழு** : **திருமதி. எம். பி. செல்வநிதி பெரேரா**
ஆசிரிய ஆலோசகர் கிறிஸ்தவம்
(ஓய்வு பெற்ற).

: **திருமதி. எஸ். பீ. சீ. பிரனாந்து**
ஆசிரியர்
வெஸ்லி கல்லூரி
கொழும்பு.

: **செல்வி. ஏ. கிதுமினி சல்காது**
ஆசிரியர்
மேம / நீர் / கட்டுநாயக்க மகா வித்தியாலயம்
கட்டுநாயக்க.

**மொழிப் பதிப்பாசிரியர்** : **திருமதி. ச. அற்புதரூபன்**
ஆசிரியர்
கொ/குமர உதயம் தமிழ் வித்தியாலயம்
கிருலப்பனை.

**சித்திரம், அட்டை வடிவமைப்பு** : **திரு. பிரசாத் நிஷாந்த பீரிஸ்**
ஆசிரியர்
பரி. பீட்டர் கல்லூரி
கொழும்பு.

**சரவை பார்ப்பு** : **திரு. க. மகாவலிராயன்**
அபிவிருத்தி உதவியாளர்
கல்வி அமைச்சு
இசுருபாய.

**கணினி வடிவமைப்பு** : **செல்வி. நாகரட்ணம் சந்திரப்பிரியா**
கணினி உதவியாளர்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | கடவுள் தந்த அழகிய உலகம் | 1 |
| 2. | எனது அழகிய உலகம் | 2 |
| 3. | நாங்கள் நல்ல பிள்ளைகளாவோம் | 3 |
| 4. | கடவுளின் குடும்பம் | 5 |
| 5. | அன்புடன் வாழ்வோம் | 7 |
| 6. | கிறிஸ்தவ நற்பண்புகள் | 9 |
| 7. | இயேசு எருசலேம் ஆலயம் செல்லல் | 12 |
| 8. | இயேசு திருமுழுக்கு பெறுதல் | 15 |
| 9. | கானா ஊர் திருமணம் | 17 |
| 10. | எல்லாவற்றையும் வழங்கும் கடவுள் | 20 |
| 11. | சிட்டுக் குருவி | 22 |
| 12. | ஜெபம் | 24 |
| 13. | அன்பு மகிழ்வு சமாதானம் | 26 |
| 14. | சமாதானமாகிய ஏசாவும் யாக்கோபும் | 28 |
| 15. | நல்ல நண்பன் | 30 |
| 16. | கருணை காட்டுவோம் | 32 |
| 17. | விதைப்பவர் உவமை | 34 |
| 18. | அரச குமாரியின் பாதுகாப்பு பெற்ற மோசே | 36 |
| 19. | காணாமற்போன மகன் உவமை | 39 |
| 20. | இறைவார்த்தையைக் கேட்டு நடப்போம் | 42 |
| ♦ | செயற்பாடு | 44-52 |


# 1

# கடவுள் தந்த அழகிய உலகம்

அகிலத்தையும், ஆகாயத்தையும்
உந்தன் வல்ல பராக்கிரமத்தாலே
ஆண்டவா நீர் படைத்தீரே

உந்தன் வல்ல கரத்தினாலே
ஆகாதது ஒன்றுமில்லை
உம்மால் ஆகாதது ஒன்றுமில்லை

சர்வ வல்லவரே துதிமகிமைக்குப்
பாத்திரரே ஆகாதது என்று
ஏதுமில்லை உம்மால் ஆகாதது
ஒன்றுமில்லை.



**உலகைப் படைத்த கடவுளை காலையும், மாலையும் துதிப்போம்.**

## 2

# எனது அழகிய உலகம்

காற்றே கடலே மேகங்களே
கருணைக் கடவுளைப்
போற்றுங்கள்!

வானகமே நல் வையகமே
வானத்தில் பறக்கும்
பறவைகளே விண்மீன்களே
நீங்கள் ஒன்றாக சேர்ந்து
விண்ணகத் தந்தையைப்
போற்றுங்கள்!

அசைந்தாடும் செடி
கொடிகளே அலைந்து
திரியும் மிருகங்களே
வண்ண மீன்களே நீங்கள்
ஒன்றாக சேர்ந்து விண்ணகத்
தந்தையைப் போற்றுங்கள்!



**கடவுள் அருளிய அனைத்துக்கும் நன்றி !**

1ம், 2ம் பாடங்களுக்கான செயற்பாடு 44ம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

3

# நாங்கள் நல்ல பிள்ளைகளாவோம்



இயேசு தமது பெற்றோரை நேசித்தார்.
இயேசு பெற்றோருக்குக் கீழ்ப்படிந்தார்.
இயேசு பெற்றோருக்கு உதவி செய்தார்.
இயேசு பெற்றோரின் அன்புக்கும் பாதுகாப்புக்கும் மத்தியில் மகிழ்வுடன் வாழ்ந்தார்.

நாம் இயேசுவைப் போன்று,
பெற்றோருக்குக் கீழ்ப்படிவோம்.
பெற்றோருக்கு உதவி செய்வோம்.
பெற்றோரை நேசிப்போம்
சமூகத்தில் நல்லவர்களாக வளர்வோம்.

**எனது குடும்பத்துக்காக கடவுளுக்கு நன்றி!**

## செயற்பாடு

பொருத்தமான விடைகளைத் தெரிவுசெய்து இணையுங்கள்.

**இயேசுவின் பிள்ளையாகிய நான்**

- அம்மாவுக்கு உதவி செய்வேன்.
- ஆசிரியருக்குக் கீழ்படிவேன்.
- பறவைகளுக்குக் கல் எறிவேன்.
- நோயாளரைக் கவனிப்பேன்.
- பொருள்களைப் பகிர்வேன்.
- பாடம் படிப்பேன்.

# 4

# கடவுளின் குடும்பம்





கிறிஸ்தவராகிய எமக்கு ஞாயிற்றுக் கிழமை முக்கிய நாள் ஆகும்.

நாம் ஞாயிற்றுக் கிழமைகளில் குடும்பமாக இணைந்து ஆலயம் செல்வோம்.

நாம் ஒன்றிணைந்து,

கடவுளைத் துதிப்போம்.

கடவுளை வழிபடுவோம்.

இறைவார்த்தையைக் கற்போம்.

ஒருவருக்கொருவர் உதவி செய்வோம்.



ஆலயத்தில் நாம் அனைவரும் ஒரே குடும்பம் ஆவோம்.

**நான் ஒற்றுமையான குடும்பத்தை நேசிக்கின்றேன்.**

## செயற்பாடு

பின்வரும் வாக்கியங்களை வாசித்து சரியாயின் (✓) எனவும் பிழையாயின் (✕) எனவும் அடையாளம் இடுங்கள்.

1. நாம் ஞாயிறுதோறும் ஆலயம் செல்வோம். ( )
2. நாம் ஒன்றிணைந்து கடவுளைத் துதிப்போம். ( )
3. நாம் ஒரே குடும்பமாக வாழமாட்டோம். ( )
4. நாம் இறைவார்த்தையைக் கற்போம். ( )
5. நாம் ஒருவருக்கொருவர் உதவி செய்ய மாட்டோம். ( )

# 5

# அன்புடன் வாழ்வோம்

**தாசரே இத் தரணியை அன்பாய் இயேசுவிற்கு**
**சொந்தமாக்குவோம். நேசமாய் இயேசுவைக்**
**கூறுவோம். அவரைக் காண்பிப்போம்,**
**மாவிருள் நீக்குவோம். வெளிச்சம் வீசுவோம்.**
**பசியுற்றோர்க்கும், பிணியாளிகட்கும்**
**பட்சமாக உதவி செய்வோம். உசித**
**நன்மைகள் நிறைந்து, தமைமறந்து**
**இயேசு கனிந்து திரிந்தனரே.**

*தங்கை :* *அண்ணா... அந்த பாடல் உங்களுக்குக் கேட்கிறதா? அது அழகான பாடல்.*

*அண்ணா :* *ஆம் தங்கை! அழகான பாடல். பிறருக்கு உதவி செய்யுமாறு இயேசு எமக்குக் கூறுகின்றார்.*

*தங்கை :* *அண்ணா! நாம் பிறருக்குச் செய்யும் உதவி இயேசுவுக்குச் செய்யும் உதவியாகுமா? நாம் அம்மாவிடம் கேட்போம். அம்மா... அம்மா...*

*அம்மா :* *ஏன்? மகளே! ஆடை இல்லாதவருக்கு*

ஆடை கொடுத்தல், நோயாளரைப் பராமரித்தல் ஆதரவற்றோருக்கு கருணை காட்டல், வயோதிபருக்கு உதவி செய்தல், துன்பப்படுபவர்களை ஆறுதல்படுத்தல் போன்றன இயேசுவுக்காகச் செய்யும் பணிகளே!

தங்கை : ஆம்! அம்மா, இயேசு கூறியது போல நாம் எல்லோருக்கும் உதவி செய்வோம்.

அம்மா : மகளே, மகனே, நல்லது. நம் கடவுளுக்கு நன்றி.

**நான் பிறருக்கு உதவி செய்ய விரும்புகிறேன்.**

### செயற்பாடு


1. நீர் பிறருக்கு உதவி செய்யும் சந்தர்ப்பம் ஒன்றை வரையுங்கள்.

## 6

# கிறிஸ்தவ நற்பண்புகள்

**கதையை வாசித்து கிறிஸ்தவ பண்புகளை அறிந்து கொள்வோம்.**

ஒரு நாள் ரவி தனது அப்பாவுடன் நீண்ட தூர பயணம் போனான். அன்று மழை நாள் ஆகும். அவர்களது முச்சக்கரவண்டி இடையில் நின்றுவிட்டது. அதனை திருத்த முயற்சி செய்தனர். அவர்கள் பொறுமையாக, தொடர்ந்து கடவுளிடம் ஜெபம் செய்தார்கள்.



சிறிது நேரத்துக்கு பின்னர் சிற்றூர்தி ஒன்று அந்த வழியில் வந்தது. அதில் சென்றவர்கள் இவர்களை இனங்கண்டு சிற்றூர்தியை நிறுத்தினர்.


கடும் மழையையும் பாராது அவர்களுக்கு உதவி செய்தனர். ரவியிடம் சோம்பல் காணப்படவில்லை. சிற்றூர்தியில் பயணம் செய்தவர்கள் உடைந்த வாகனத்தை சுறு சுறுப்பாகத் திருத்தி கடவுளின் அன்பைக் காட்டினர்.

**நல்ல பிள்ளைகளாக செயற்படுவோம்.**



## செயற்பாடு

பின்வரும் உருவத்தில், கிறிஸ்தவ பிள்ளையிடம் காணப்பட வேண்டிய நற்பண்புகளை தெரிவு செய்து நிறம் தீட்டுங்கள்.



# 7

# இயேசு எருசலேம் ஆலயம் செல்லல்



இயேசு பன்னிரண்டு வயதில் எருசலேம் ஆலயம் சென்றார். இயேசு ஆலயத்தில் தங்கிவிட்டார். அவர் போதகர் நடுவில் அமர்ந்து அவர்கள் சொல்வதைக் கேட்டுக்கொண்டும், அவர்களிடம் கேள்விகளை எழுப்பிக் கொண்டும் இருந்தார்.

பெற்றோர் இயேசுவைத் தேடிக்கொண்டு திரும்பவும் எருசலேமுக்குச் சென்றார்கள். அவருடைய பெற்றோரும் கூடியிருந்த அனைவரும் அவருடைய அறிவைக் கண்டு வியப்பில் ஆழ்ந்தனர். அவர் அளித்த பதில்களைக் கேட்டு ஆச்சரியப்பட்டனர்.

நாம் இயேசுவைப் போன்று கடவுளைக் குறித்து கற்போம். இறைவார்த்தைகளுக்குக் கீழ்படிவோம்.

இயேசுவைப் பற்றி அறிந்துகொள்ள ஞாயிறு தோறும் ஆலயம் செல்வோம்.

## செயற்பாடு

பின்வரும் வாக்கியங்களை வாசித்து பொருத்தமான விடையின் கீழ் கோடிடுங்கள்.

1. இயேசு எருசலேம் ஆலயம் சென்றபோது வயது (ஆறு / பன்னிரண்டு)
2. இயேசு (போதகர்களிடம் / பெரியோரிடம்) கேள்விகளைக் கேட்டார்.
3. இயேசுவைத் தேடி மீண்டும் பெற்றோர் (வரவில்லை/ வந்தனர்)
4. நாம் இறை வார்த்தைகளுக்குக் கீழ்ப்படிய (வேண்டும்/ கூடாது).

# 8

# இயேசு திருமுழுக்கு பெறுதல்



இயேசு கலிலேயாவின் நாசரேத்து ஊரிலிருந்து சென்றார். அந் நாட்களில் திருமுழுக்குயோவான் யோர்தான் நதியில் மக்களுக்கு திருமுழுக்குக் கொடுத்துக்கொண்டு இருந்தார்.

இயேசுவும் திருமுழுக்கு யோவானிடம் திருமுழுக்கு பெற்றார்.

அப்பொழுது புதுமையான ஒரு சம்பவம் நடைபெற்றது. அந் நேரத்தில் தூய ஆவி புறா வடிவில் தோன்றி அவர் மீது இறங்கியது.

அந்த சந்தர்ப்பத்தில் இன்னுமொரு புதுமை இடம் பெற்றது. '' என் அன்பார்ந்த மகன் நீயே. உன் பொருட்டு நான் பூரிப்படைகின்றேன்'' என்று வானத்திலிருந்து ஒரு குரல் ஒலித்தது. இது கடவுள் இயேசுவைக் குறித்து கூறிய வார்த்தையாகும்.

**திருமுழுக்கு வேளையில் இறை மகனாக அறிவிக்கப்பட்ட இயேசுவை வழிபடுவோம்.**

இப்பாடத்துக்கான செயற்பாடு 45ம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

# 9

# கானா ஊர் திருமணம்



கலிலேயாவில் உள்ள கானா ஊரில் திருமணம் ஒன்று நடைபெற்றது. இயேசுவின் தாயும் அங்கு இருந்தார். திருமண விழாவில் திராட்சைரசம் தீர்ந்து போனது.

இயேசுவின் தாய் இயேசுவிடம் ''திராட்சைரசம் தீர்ந்து விட்டது'' என்றார். அவ்வாறே அவர் பணியாளரிடம் ''இயேசு உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள்'' என்றார்.

ஆறு கல் தொட்டிகள் அங்கு இருந்தன. இயேசு ‘‘இத் தொட்டிகளில் தண்ணீர் நிரப்புங்கள்’’ என்றார். தொட்டிகளில் தண்ணீர் நிரப்பப்பட்டது.

**கற்தொட்டிகள் 6**



அப்போது தண்ணீர் திராட்சைரசமாக மாறியது. திராட்சைரசம் சுவையாக இருந்தது என எல்லோரும் கூறினார்கள்.

இது இயேசு செய்த முதலாவது புதுமை ஆகும்.

## செயற்பாடு

பின்வரும் வாக்கியங்கள் சரியாயின் (✓) எனவும் பிழையாயின் பிழை (✗) எனவும் அடையாளம் இடுங்கள்.

1. இயேசு கானா ஊரில் திருமண விழாவுக்குச் சென்றார். ( )
2. இயேசுவின் தந்தையும் அங்கு சென்றார். ( )
3. திருமணவிழாவில் திராட்சைரசம் முடிந்தது. ( )
4. பணியாளர் 7 கற்தொட்டிகளில் தண்ணீர் நிரப்பினர். ( )
5. தண்ணீரைத் திராட்சைரசமாக மாற்றியமை இயேசு செய்த முதல் புதுமை ஆகும். ( )

# 10

# எல்லாவற்றையும் வழங்கும் கடவுள்

எமக்குத் தேவையான எல்லாவற்றையும் கடவுள் தருகின்றார் என இயேசு போதித்துள்ளார்.

''வானத்துப் பறவைகளை நோக்குங்கள்;
அவை விதைப்பதுமில்லை; அறுப்பதுமில்லை;
களஞ்சியத்தில் சேர்த்து வைப்பதுமில்லை;



உங்கள் விண்ணகத் தந்தை அவற்றுக்கும்
உணவு அளிக்கின்றார்.

காட்டுச் செடிகள் எப்படி வளருகின்றன
எனக் கவனியுங்கள்;
அவை உழைப்பதுமில்லை; நூற்பதுமில்லை;

உயிர்வாழ எதை உண்பது? எதை உடுத்துவது?
என்று நீங்கள் கவலை கொள்ளாதீர்கள் என
இயேசு எமக்குக் கற்பித்துள்ளார்.
கடவுள் எமக்கு எல்லாவற்றையும் அளிக்கின்றார்.''

**எல்லாவற்றையும் வழங்கும் கடவுளுக்கு நன்றி.**

இப்பாடத்துக்கான செயற்பாடு 46ம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.


# 11

# சிட்டுக் குருவி

சிட்டுக் குருவி முட்டையிடும் காலத்தில் வீடுகளுக்கு அண்மையில் கூடு கட்டும். முட்டையிலிருந்து குஞ்சுகள் வெளிவரும். அவை பெரிதாகும் வரையில் பாதுகாப்பாக வளர்கின்றன.

சிறுவராகிய உங்களையும் கடவுள் படைத்துள்ளார். உங்கள் வாழ்வு கடவுளுக்கு முக்கியமானது. கடவுள் உங்களைப் பாதுகாக்கின்றார்.

**சிறுவராகிய நீங்களும் பெறுமதி மிக்கவர்.**



கடவுள் சிட்டுக்குருவிகளை நேசிக்கின்றார்.
கடவுள் எங்களையும் நேசிக்கின்றார்.
ஆம்! நான் பெறுமதிமிக்கவன்.

**நான் பெறுமதி மிக்கவன்.**


## செயற்பாடு

கூட்டினுள் உங்களது உருவத்தை வரைந்து நிறந் தீட்டுங்கள். புள்ளிக்கோட்டில் உங்கள் பெயரை எழுதுங்கள்.

..............................................................................

12

# ஜெபம்



இயேசு கற்பித்த இறைவேண்டலைக் கற்போம்.

விண்ணுலகிலிருக்கிற எங்கள் தந்தையே,
உமது பெயர் தூயதெனப் போற்றப்பெறுக!
உமது ஆட்சி வருக!
உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவதுபோல
மண்ணுலகிலும் நிறைவேறுக!
இன்று தேவையான உணவை எங்களுக்குத் தாரும்
எங்களுக்கு எதிராக குற்றம் செய்தோரை

நாங்கள் மன்னித்துள்ளது போல
எங்கள் குற்றங்களை மன்னியும்
எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும்
தீயோனிடமிருந்து எங்களை விடுவியும்

ஆட்சியும் வல்லமையும் மாட்சியும் என்றென்றும்
உமக்கே

ஆமென்!

**எப்போதும் ஜெபம் செய்வோம்.**

**செயற்பாடு**

இயேசு கற்றுக் கொடுத்த ஜெபத்தை மனனம் செய்யுங்கள்.

## 13

# அன்பு மகிழ்வு சமாதானம்





தூய ஆவியானவர் என்னில் வாசம் செய்கின்றார்.
அவர் என்னில் வாசம் செய்கின்றமையால்,
நான் அனைவரையும் நேசிக்கின்றேன்.
நான் மகிழ்வுடன் வாழ்கின்றேன்.
நான் சமாதானமாகச் செயற்படுகின்றேன்.

**நான் மகிழ்வுடன் வாழும் பிள்ளை ஆவேன்.**

## செயற்பாடு

1. மத்தியில் காணப்படும் வட்டத்திலுள்ள சொல்லுக்குப் பொருத்தமான சொற்களைக் கொண்ட வட்டங்களை நிறம் தீட்டுங்கள்.



# 14

# சமாதானமாகிய ஏசாவும் யாக்கோபும்



ஏசாவும் யாக்கோபும் சகோதரர் ஆவர்.
யாக்கோபு ஏசாவுக்கு எதிராக தவறு செய்தபடியால் அவர்களுக்கிடையே பகை ஏற்பட்டது.
அவர்கள் இருவரும் பிரிந்து வாழ்ந்தனர்.

சில காலங்களின் பின்னர் யாக்கோபு ஏசாவைத் தேடிச் சென்றான். அவர்கள் சந்தித்த வேளையில் ஏசா யாக்கோபை மன்னித்தான்.

யாக்கோபு ஏசாவுக்கு அன்பளிப்பு வழங்கினான். இருவரும் கட்டித்தழுவி அழுதனர்.

அன்பளிப்பு அவசியமில்லை என ஏசா கூறினான். ஆனால் யாக்கோபின் வற்புறுத்தலால் அவற்றைப் பெற்றுக் கொண்டான்.

அந்த நாள் இருவருக்கும் மகிழ்வான நாள் ஆகும்.

**நாம் எமது சகோதர சகோதரிகளுடன் ஒற்றுமையாக வாழ்வோம்.**

## செயற்பாடு

யாக்கோபு - ஏசா சமாதானமாகிய கதையை நடித்துக் காட்டுங்கள்.

15

# நல்ல நண்பன்



யோனத்தானும் தாவீதும் நல்ல நண்பர்கள். யோனத்தானின் தந்தை சவுல் அரசன் ஆவான். சவுல் தாவீதில் பொறாமை கொண்டமையால் தாவீதின் வாழ்வை அழிக்க முயன்றான். ஆனாலும் யோனத்தான் தனது நண்பன் துன் புறுத்தப்படுவதை விரும்பவில்லை.

சவுல் அரசனிடமிருந்து தாவீது தப்பி ஓட நேர்ந்தது.

இரு நண்பர்களும் பிரிந்து செல்லும் முன் ஒருவரை ஒருவர் முத்தமிட்டு அழுதனர்.

அவர்கள் இருவரும் என்றும் நண்பர்களாக இருப்பதாக உறுதி செய்தனர்.

**யோனத்தான் மற்றும் தாவீதைப் போன்று நல்ல நண்பர்களாகச் செயற்படுவோம்.**

இப்பாடத்துக்கான செயற்பாடு 47ம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

# 16

# கருணை காட்டுவோம்



தாவீதின் நண்பன் யோனத்தானுக்கு, ஊனமுற்ற மகன் ஒருவன் இருந்தான். அவனுடைய பெயர் மெபிபோசேத்து.

பிற்காலத்தில் தாவீது அரசன் ஆனான். யோனத்தான் போரில் இறந்துவிட்டான். தாவீது தனது நண்பன்

யோனத்தானின் மகனை அரச மாளிகைக்கு அழைத்தான். மெபிபோசேத்து அரசருடன் எப்போதும் உணவருந்தி வந்தான்.

தாவீது அரசன் சீபா எனும் பணியாளரிடம் மெபிபோ சேத்தை கவனித்துக் கொள்ளுமாறு ஒப்படைத்தார். அவனுக்காகப் பயிர்செய்து அறுவடைகளைச் சேகரிக்குமாறு கூறினான்.

தாவீது அரசன் சவுலின் வம்சத்தில் எஞ்சி இருந்த மெபிபோசேத்துக்கு இவ்வாறு கருணை காட்டினான்.


நாம் சமூகத்தில் கருணை காட்டி வாழ்வோம்.

## செயற்பாடு

நீங்கள் உமது நண்பனுக்கு நண்பிக்கு இரக்கம் காட்டிய நிகழ்வை சித்திரமாக வரைந்து நிறம் தீட்டுங்கள்.

17

# விதைப்பவர் உவமை



ஒருநாள் விதைப்பவர் விதைத்தபோது சில விதைகள்,

1. வழியோரம் விழுந்தன → வானத்துப் பறவைகள் சாப்பிட்டு விட்டன.
2. பாறை மீது விழுந்தன → நீர் இல்லாமல் கருகிப் போயின.
3. முட்செடிகளின் நடுவே விழுந்தன → முட்செடிகள் நெருக்கிவிட்டன.
4. நல்ல நிலத்தில் விழுந்தன → நன்கு வளர்ந்து நல்ல பலன் தந்தன.

**சிறுவன் ஆகிய நான் நல்ல நிலத்தில் விழுந்த விதை போன்று**
**கடவுள் முன்னிலையில் நல்ல பிள்ளையாக வாழ்வேன்.**



இப்பாடத்துக்கான செயற்பாடு 49ம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

18

# அரச குமாரியின் பாதுகாப்பு பெற்ற மோசே

பார்வோன் மன்னன், பிறக்கும் எபிரேய ஆண்மகவு அனைத்தையும் நைல் நதியில் எறிந்து விடுங்கள் என ஆணை விடுத்தான்.




அம்மா ஒருவர் மூன்று மாதங் களாக தனது மகனை வீட்டில் மறைத்து வைத்திருந்தாள்.



இதற்கு மேல் மகனை மறைத்து வைக்க இயலாததால் கோரைப் புல்லால் பேழை ஒன்று செய்து அதன்மீது நிலக்கீல் பூசினாள். குழந்தையை அதனுள் வைத் தாள். பின்னர் நைல் நதிக்கரை யிலுள்ள நாணல்களுக்கு இடை யில் பேழையை வைத்தாள்.

குழந்தைக்கு என்ன ஆகுமோ என்பதை அறிந்து கொள்ள குழந்தையின் அக்கா தூரத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்தாள்.



அப்போது நைல் நதியில் நீராட அரசகுமாரி தோழியருடன் வந்தாள். அவள் நாணலிடையே பேழையைக் கண்டு தன் தோழி ஒருத்தியை அனுப்பி அதனை எடுத்தாள்.



அதைத் திறந்தபோது அழகிய ஆண் குழந்தை அழுது கொண்டிருந்தது. ‘‘இது எபிரேயக் குழந்தை’’ என அரசகுமாரி கூறினாள்.

குழந்தையின் அக்கா அரச குமாரியிடம் ‘‘பாலூட்டி வளர்க்க செவிலி ஒருத்தியை அழைத்து வரட்டுமா’’ என்றாள்.

அரசகுமாரி சரி என்று கூறினாள். அவள் சென்று குழந்தையின் தாயை அழைத்து வந்தாள். அரசகுமாரி குழந்தைக்கு பாலூட்டி வளர்க்க அம்மாவிடம் ஒப்படைத்தாள்.

குழந்தை வளர்ந்த பின்னர் அம்மா அதனை அரசகுமாரியிடம் கொண்டு போய் விட்டாள். குழந்தை அரசகுமாரியிடம் மகனாக வளர்ந்து வந்தான்.

''நீரிலிருந்து இவனை நான் எடுத்தேன்'' என்று கூறி அவள் அவனுக்கு 'மோசே' என்று பெயரிட்டாள்.

**கடவுள் அரசகுமாரியின் ஊடாக மோசேக்கு பாதுகாப்பு வழங்கினார்.**

# 19

# காணாமற்போன மகன் உவமை

(ஒருவருக்கு இரு புதல்வர்கள் இருந்தார்கள். இளையமகன் தந்தைக்குக் கீழ்படியவில்லை. ஒருநாள் அவன் தந்தையை நோக்கி...)

இளைய மகன் : அப்பா உங்களுடைய சொத்தில் எனக்கு உரிய பங்கைத் தாருங்கள்.

அப்பா : (சிறிது யோசித்தல்) ம்... மகனே! இதோ உனது பங்கு. ஆனால் இதை வீண்விரயம் செய்துவிடாதே.

இளைய மகன் : ஆ! என்னிடம் நிறைய பணம் உண்டு. நான் வேறு நாட்டுக்குச் செல்வேன். எனது வாழ்நாளை மகிழ்வுடன் செலவிடுவேன்.

(இளையமகன் வேறு நாட்டுக்கு செல்லல் அங்கு பணத்தை வீணாக செலவழித்தல்)

இளையமகன் : (தனக்குள் கூறல்) ஐயோ! இப்போது எனது பணம் முடிவடைந்துவிட்டது. எனது நண்பர்களும் என்னைக் கை விட்டுச் சென்று விட்டனர். நான் ஒரு தொழிலைத் தேடிக்கொள்ள வேண்டும். (பன்றி மேய்க்கும் தொழில் செய்தல்)

இளைய மகன் : எனக்கு மிகுந்த பசியாய் இருக்கின்றது. பன்றிகளின் உணவை உட்கொண்டாவது எனது பசியைப் போக்க வேண்டும்.

இளைய மகன் : நான் புறப்பட்டு என் தந்தையிடம் செல்வேன். அவர் என்னை ஏற்றுக் கொள்வாரா? ஆம்!
நான் செல்கிறேன்.
(அவன் இவ்வாறு நினைத்து மீண்டும் வீட்டை நோக்கி செல்லல்)

தந்தை : (தந்தை அன்புடன் வரவேற்றல்) எனது இளைய மகன் மீண்டும் கிடைத்து விட்டான்.



இளைய மகன் : அப்பா, கடவுளுக்கும் உங்களுக்கும் எதிராக நான் பாவம் செய்தேன்.

தந்தை : முதல்தரமான ஆடையைக் கொண்டு வந்து இவனுக்கு உடுத்துங்கள். கைக்கு மோதிரம் அணிவியுங்கள். நாம் மகிழ்ந்து விருந்து கொண்டாடுவோம். காணாமற் போன எனது மகன் மீண்டும் கிடைத்து விட்டான்.

**கடவுள் எங்களை மன்னித்து அன்புடன் ஏற்றுக் கொள்கின்றார்.**

## செயற்பாடு

மேற்படி உவமையிலிருந்து தந்தையிடம் இருந்தும், இளைய மகனிடமிருந்தும் நீர் கற்றுக் கொள்ளும் முன்மாதிரிகளை புள்ளிக்கோட்டில் எழுதுங்கள்.

தந்தையிடமிருந்து ......................................

..............................................................

இளைய மகனிடமிருந்து ..................................


..............................................................

20

# இறைவார்த்தையைக் கேட்டு நடப்போம்



கற்பாறை மீது கட்டியவன் புத்தியுள்ளவன்.
பெருமழை பெய்தது.
பெருமழை பெய்து நீர் உயர்ந்தது.
அந்த வீடோ நிலைத்து நின்றது.




மணலின் மேல் கட்டியவன் புத்தியற்றவன்.
பெருமழை பெய்தது.
பெருமழை பெய்து நீர் உயர்ந்தது.
அந்த வீடோ உடைந்து போனது.

**நாம் இறைவார்த்தையைக் கேட்டு வாழ்வோம்.**

இப்பாடத்துக்கான செயற்பாடு 49ம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

## செயற்பாடு பாடம் 1, 2


பின்வரும் வட்டத்தினுள் பெயரிடப்பட்டவைகளுக்குப் பொருத்தமாக கடவுளால் படைக்கப்பட்டவைகளை வரையுங்கள். நிறம் தீட்டுங்கள்.



## செயற்பாடு பாடம் 8


இணைப்பு

இயேசு திருமுழுக்குப் பெற்ற நிகழ்வை நிறம் தீட்டுங்கள்.




## செயற்பாடு பாடம் 10

குருவிக்கூட்டில் காணப்படும் குருவிக் குடும்பத்தை நிறம் தீட்டுங்கள்.



## செயற்பாடு பாடம் 15

1. உங்களையும் உங்களது நண்பரையும் புத்தக அடையாள அட்டையில் வரைந்து நிறம் தீட்டுங்கள்.
2. சிவப்புப் புள்ளிக்கோடுகளை சுற்றி வெட்டுங்கள்.
3. புத்தக அடையாள அட்டையை கறுப்புப் புள்ளிக் கோட்டின் மீது வெட்டுங்கள்.
4. துளையிட்டு ரிபன் பட்டியைக் கட்டுங்கள்
5. உங்களது நண்பருக்கு அன்பளிப்பாக வழங்குங்கள்.



## செயற்பாடு பாடம் 17

விதைப்பவன் உவமையில் நல்ல நிலத்தில் விழுந்த விதைகள் பலனளித்த முறைகளைச் சித்திரமாக வரையுங்கள். நிறம் தீட்டுங்கள்.

## செயற்பாடு பாடம் 20


1. வீட்டை அலங்கரியுங்கள்

2. சிவப்பு புள்ளிக்கோட்டின் மீது வெட்டி தாளை எடுங்கள்.

3. தடித்த தாளில் ஒட்டுங்கள்.

4. கறுப்பு புள்ளிக் கோடுகள் வழியாக வீட்டைச் சுற்றி வெட்டுங்கள்

5. வகுப்பறையின் ஓர் இடத்தில் தொங்கவிடுங்கள்.


நான்
சொல்லும்
இறைவார்த்தைகளைக்
கேட்டு அவற்றின்படி
செயற்படுகிறவர் பாறை மீது தம்
வீட்டைக் கட்டிய அறிவாளிக்கு
ஒப்பாவார். (மத் 7:24)